குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.44/2020

அ.சா.3

2025–ம் ஆண்டு நவம்பர் 10–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவாஜி | தொழில் | |
| தந்தை பெயர் | சடையன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.32 மணி,

Accused Venkatesan present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.P.Dasaradhan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஆர்.சி.செட்டிப்பட்டியில் ரவுண்டான அருகே வசித்து, அங்கு பஞ்சர் கடை வைத்துள்ளேன். சில வருடங்களுக்கு முன்பு, ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா அருகே இருந்தபோது சாலையில் டமால் என்று சத்தம் கேட்டது. ஒரு ஆண் நபர் அடிபட்டு கிடந்தார். என்ன வண்டி மோதியது என்று தெரியவில்லை. அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. கடந்த 28.08.2018 ஆம் தேதி மாலை 19.30 மணியளவில் ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா அருகே அ.சா.1 ஓமலூர் நோக்கி நடந்து சென்றபோது, அவருக்கு பின்னால், அதே சாலையில் எதிரி வெங்கடேசன் என்பவர் டி.என்.30 என்.0199 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தினை ஓமலூர் நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அ.சா.1–ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:59:20 +0530

நேரில் பார்த்தேன் என்றால் சரி. ஆனால் பேருந்தின் பதிவெண் எனக்கு சரியாக தெரியவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் ரோட்டில் பஞ்சர் கடை வைத்துள்ளேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்றேன் என்றால் சரி. போலிசார் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.39 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:59:24 +0530